1970 மார்ச் 23]

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இப்போதுள்ள ஆணையிலேயே வேஷ்டிகளில் கலர் பார்டர் 4¼ இஞ்ச் அகலத்திற்கு மேல் போடக் கூடாது என்று ஆணையில் கூறப்பட்டுள்ளது.

DR. H. V. HANDE : Sir, is it a fact that the Central Government have passed an order that these sarees must be completely releated to the handloom sactor and whether this Government are in touch with the Central Government? Also whether it is a fact that the Central Government have complained that our State Government have not complied with the order that they have passed. What is the exact position now? Will the Hon. Minister be pleased to give details about it?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : சேலைகளைப் பொறுத்தவரையில் கலர் சேலைகளில் கரை இரண்டரை இஞ்சுக்கு மேல் பவர் லூமில் போடக் கூடாது என்று ஆணையில் குறிக்கப்பட்டிருக்கிறது. அது அமுலாக்கப்படுகிறதா என்பது பெரிய பிரச்சினையாக இருக்கிறது. நம் மாநிலத்தைப் பொறுத்தவரையில் அதிகப் பிரச்னை கிடையாது. விசைத்தறிகள் ஏராளமாக உள்ள சில மாநிலங்களில் இந்த ஆணை சரியாக அமுலாக்கப்படாததால் நாமும் பாதிக்கப்படுகிறோம், நம் கைத்தறியும் பாதிக்கப்படுகிறது. நம் நாட்டிலுள்ள மிகக் குறைவான விசைத்தறிகளும் பாதிக்கப்படுகிறது. மத்திய அரசு எல்லா மாநிலங்களிலும் இந்த ஆணையை அமல் நடத்துவதற்கு சிரத்தை காட்ட வேண்டும் என்று வலியுறுத்தியிருக்கிறோம். நம் மீது அவர்கள் பாரத்தைத் தூக்கிப் போட்டு உங்கள் அதிகாரிகளை வைத்து அமுலாக்குங்கள் என்று சொல்கிறார்கள். ஒவ்வொரு மாநிலத்திலும் அமுலாக்குவதில் தயக்கம் காட்டுவதால் இந்தப் பிரச்னை வளர்ந்து கொண்டே இருக்கிறது.

Industrial Investment Corporation

* 496 Q.—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether the Tamil Nadu Industrial Investment Corporation proposes to finance working capital; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) & (இ) வாம்புக்குட்பட்டு ஒரு சில நிறுவனங்களுக்குத் தகுதி அடிப்படையில் மட்டுமே நடைமுறை மூலதனம் கொடுக்கப்படுகிறது.

திரு. க. கோமதிசங்கர தீட்சிதர் : இந்தக் கைத்தறி ஸ்தாபனங்களில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு அவர்களுக்கு வேண்டிய அதிகப்படியான சலுகைகளைச் செய்ய இந்த அரசாங்கம் முன் வருமா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி, " தமிழ் நாடு தொழில் முதலீட்டுக் கழகம், தொழில் நடைமுறை மூலதனத்துக்கு நிதி உதவி அளிக்கத் திட்டமிட்டுள்ளதா ?" என்பதாகும். கேள்வி 496.

[1970 மார்ச் 23

திரு. ஏ. ஆர். மாரிமுத்து: இந்தத் தொழில் ஸ்தாபனங்களுக்கு நடைமுறை மூலதனத்திற்காக அரசினரோ அல்லது தொழில் உதவிக் கார்ப்பரேஷனோ அதிகப் பண உதவி செய்வதில்லை. காரணம், மெஷின்ஸ் வாங்குவதற்கும் கட்டடம் கட்டுவதற்கும் மட்டும் தான் தாங்கள் கொடுக்கிறோம் என்று கூறுகிறார்கள். இதை நடைமுறையில் தெரிந்து கொள்ளாத நிலையில் இருப்பவர்கள் கையில் உள்ள மூலதனத்தைப் போட்டு கட்டடங்கள் கட்டி, மெஷின்ஸ் வாங்கிய பிறகு நடைமுறை மூலதனத்துக்குப் பணம் இல்லாமல் கஷ்டப்படுகிறவர்கள் எவ்வளவோ பேர்கள் இருக்கிறார்கள். ஆகவே, இப்போது உள்ள நடைமுறையை மாற்றி கட்டடங்கள் கட்டுவதற்கும் அல்லது நடைமுறை மூலதனத்துக்கும் நிதி உதவி கேட்டால் கொடுக்கலாம் என்ற முறையை நடைமுறைக்குக் கொண்டு வருமா? அப்படிச் செய்தால்தான் தொழிற்சாலைகளைப் பயன் உள்ளதாகச் செய்யமுடியும் என்பதை அரசு உணருமா? ஆகவே நடைமுறை மூலதனத்துக்கும் பணம் கொடுக்க அரசாங்கம் முன் வருமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: கட்டடம் கட்டி இயந்திரங்கள் வாங்கிவிட்டு மீதிப் பணம் கேட்கிற நிகழ்ச்சிகள் இல்லை. இதற்கும் கொடுத்துவிட்டு மூலதனத்துக்கும் தரவேண்டும் என்று தான் கேட்கிறார்கள். அவர்களுக்குத் தேவைப்படுகிற தொகையில் கட்டடம், இயந்திரங்கள் இவற்றிற்கு கிட்டத்தட்ட 50%ல் இருந்து 75% வரையில் நாம் கொடுக்கிறோம். மூலதனமும் கொடுக்க வேண்டுமென்கிற கொள்கையை அரசாங்க ஆணையில் ஒப்புக் கொண்டு இந்த எம்.ஐ.சி.-க்கு அறிவித்திருக்கிறோம். எந்தெந்த அளவிற்கு நடைமுறை மூலதனத்துக்கும் பணம் கொடுக்க முடியுமோ அதற்கும் நாம் உதவி செய்யவேண்டுமென்று வற்புறுத்தி வருகிறோம்.

திரு. கே. போஜன்: அமைச்சர் அவர்களின் பதிலிலிருந்து தொழில் முதலீட்டுக் கழகம் ஒரு வரம்பிற்கு உட்பட்டு ஒருசில தொழில் நிறுவனங்களுக்குத்தான் நிதி உதவி அளிக்கிறது என்று கூறினார்கள். அந்த வரம்பிற்கு உட்பட்ட தொழில் நிறுவனங்கள் யாவை?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: ஒவ்வொரு நிறுவனத்திற்கும் தேவைப்படும் பணத்தின் அளவை வைத்து, அவர்களின் தேவையின் தன்மையை வைத்துக் கொடுக்கிறோம். இயந்திரங்கள், கட்டடம் போன்றவற்றிற்கு தேவையான பணத்தை அவர்களும் ஓரளவிற்குப் போட்டு நாமும் ஓரளவிற்கு நடைமுறை மூலதனத்துக்கு கொடுக்கக்கூடிய வாய்ப்பு இருந்தால் கொடுக்கிறோம். எல்லாமே நாம் கொடுக்க வேண்டுமென்று சொல்கிறார்கள். அவர்கள் பணம் எதுவும் இல்லாமலேயே நாமே முழுவதற்கும் பணம் கொடுத்து விடுவது நல்லதா என்ற தயக்கத்தில்தான் இந்தக் கொள்கையை, அதாவது கொஞ்சம் வரம்பிற்குட்பட்டு நடக்க வேண்டும் என்று கருதுகிறோம்.

1970 மார்ச் 23]

திரு. சு. துரைசாமி: ஒருசில தொழில்கள் என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அதில் பனியன் உற்பத்தி இருக்கிறதா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: ஒரு சில தொழில்கள் என்று என் பதிலில் இல்லை. ஒருசில நிறுவனங்களுக்கு என்றுதான் கூறியிருக்கிறேன். தேவைப்பட்டவர்கள் மனுக்களைப் பார்த்து அந்தந்த நிறுவனங்களின் தேவைகளை கணக்கிலெடுத்துக்கொண்டு ஒரு வரம்பு வைத்து கொடுப்பதுதான் திட்டம்.

வாலாஜா வட்டத்தில் சர்க்கரை ஆலை

* 497 வின—திரு. எம். அப்துல் கபூர் சாகிப்: மாண்புமிகு தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) வட ஆற்காடு மாவட்டத்தில், இந்த ஆண்டு ஆரம்பிக்கப்பட இருக்கும் சர்க்கரை ஆலையை வாலாஜா வட்டத்தில் அமைப்பது குறித்து அரசு கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டதா?

(இ) ஆம் எனில், வாலாஜா வட்டத்தில் எந்த இடத்தில் எப்போது ஆரம்பம் செய்யப்படும்?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) & (இ) ஆம்.

வாலாஜா வட்டத்தில் சர்க்கரை ஆலை நிறுவுவதாக உத்தேசமில்லை. புதிய சர்க்கரை ஆலைகள் இரண்டினையும் குடியாத்தம் வட்டத்தைச் சார்ந்த பிரம்மாபுரத்திலும், திருப்பத்தூர் வட்டத்தைச் சார்ந்த ஆம்பலூரிலும் அமைப்பதாக அரசு தீர்மானித்திருக்கிறது.

திரு. நா. வீராசாமி: அங்கு சர்க்கரை ஆலை ஆரம்பிப்பதற்கான வேண்டுகோள் வந்தது, ஆனல் ஆரம்பிக்கிற உத்தேசம் இல்லை என்று சொன்னர்கள். வாலாஜா, செய்யாறு, ஆரணி இம் மூன்று தாலுகாக்களில் ஒரு சர்க்கரை ஆலை கூடக் கிடையாது. ஆகவே, அரசுத் துறையில் ஒரு சர்க்கரை ஆலையை அனுமதிப்பதற்கு இங்கு இப்போது திட்டம் இல்லை என்று சொன்னலும் தனியார் துறையில் ஆரம்பிப்பதற்கு வேண்டுகோள் போட்டிருந்தார்கள், அதையாவது அரசாங்கம் பரிசீலிக்குமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: எல்லா மாவட்டங்களைக் காட்டிலும் வட ஆர்க்காடு மாவட்டத்தில்தான் அதிகமான சலுகைகள் காட்டி வருகிறோம். ஏற்கனவே கூட்டுறவு சர்க்கரை ஆலை ஒன்று இருக்கிறது. மேலும் நாம் தொடங்க இருக்கிற இரண்டு ஆலைகளை அதே வட ஆர்க்காடு மாவட்டத்தில்தான் தொடங்க வேண்டுமென்று முடிவு செய்திருக்கிறோம். இன்னொரு ஆலை போளூர் வட்டத்தில் தனியார் துறையில் ஆரம்பிக்க வேண்டுமென்று முயற்சி எடுத்திருக்கிறார்கள். அதற்கும் சிபாரிசு செய்திருக்கிறோம். இவ்வளவெல்லாம் கொடுத்தும் வட ஆர்க்காடு உறுப்பினர்களுக்கு திருப்தி ஏற்படவில்லையே என்பதுதான் வருத்தமாக இருக்கிறது.